சுருக்கம்

பள்ளிக் கல்வித் துறை – சட்டமன்ற பேரவை விதி எண்.110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் துப்புரவாளர் மற்றும் இதர பணிகளுக்கான 5000 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் தோற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (ஆர்1) துறை

அரசாணை (நிலை) எண். 47

நாள்:02.03.2012
திருவள்ளுவர் ஆண்டு 2043
மாசி–19

படிக்கப்பட்டவை:

1) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 26.08.2011.
2) பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.100729/அ5/இ1/2011, நாள் 09.12.2011, 14.12.2011, 05.01.2012 மற்றும் 25.01.2012.

-----

ஆணை:–

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன்கீழ் 26.08.2011 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பில் ‘‘சுத்தம் மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழல் பள்ளிக் கூடங்களில் அமையப்பெற வேண்டும் என்பது எனது திடமான எண்ணமாகும். எனவே, அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் துப்புரவாளர் மற்றும் இதர பணிகளுக்கான 5000 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதன் காரணமாக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.60 கோடி செலவு ஏற்படும்’’ என அறிவிக்கப்பட்டுள்ளது.

2. மேற்காண் அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தமிழகத்தில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் சுத்தம் மற்றும் சுகாதாரமான சுற்றுச் சூழலில் அமையப்பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் 2002–2003 முதல் 2011–2012 வரையிலான காலத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள்/ உயர்நிலைப் பள்ளிகளை மேம்படுத்துதல் மூலம் ஏற்படுத்தப்பட்ட 2999 உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாணவர்களின் எண்ணிக்கை 500–க்கும் குறைவாக உள்ள 998 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா ஒரு பணியிடம் வீதம் 998 பணியிடங்கள், மாணவர்களின் எண்ணிக்கை 500–க்கும் மேலாக உள்ள 996 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா இரண்டு பணியிடங்கள் வீதம் 1992 பணியிடங்கள் மற்றும் 1005 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா 2 பணியிடங்கள் வீதம் 2010 பணியிடங்கள்

ஆகமொத்தம் 5000 ஆசிரியர் அல்லாத பணியிடங்களை அனுமதிக்குமாறு கோரி பள்ளிக் கல்வி இயக்குநர் சமர்ப்பித்த கருத்துருவினை நன்கு ஆய்வு செய்து அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:—

i. மாணவர்களின் எண்ணிக்கை 500—க்கும் குறைவாக உள்ள 998 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா ஒரு துப்புரவாளர் பணியிடம் வீதம் ரூ.1300—3000 + தர ஊதியம் ரூ.300/— என்ற சிறப்பு காலமுறை ஊதிய விகிதத்தில் 998 துப்புரவாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

ii. மாணவர்களின் எண்ணிக்கை 500—க்கு மேலாக உள்ள 996 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 1005 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா ஒரு துப்புரவாளர் பணியிடம் வீதம் ரூ.1300—3000 + தர ஊதியம் ரூ.300/— என்ற சிறப்பு காலமுறை ஊதிய விகிதத்தில் 2001 துப்புரவாளர் பணியிடங்களும் மற்றும் தலா ஒரு காவலர் பணியிடம் வீதம் ரூ.4800—10,000 + தர ஊதியம் ரூ.1300/— என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் 2001 காவலர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்படுகின்றன.

iii. அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஏற்கனவே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களுள் 5014 ஆசிரியரல்லாத அடிப்படைப்பணி பணியிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் உள்ளதை கருத்தில் கொண்டு, தற்போது உருவாக்கிட கருதப்படும் துப்புரவு பணியாளர்/காவலர் பணியிடங்களுக்கு இணையாக 5000 காலிப் பணியிடங்கள் கலைக்கப்படுகின்றன.

iv. இவ்வாறு மேலே ஆணையிடப்பட்டுள்ளவாறு பணியிடங்களை நடைமுறையில் உள்ள வழிமுறைகளின்படி நிரப்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

3. மேலே பத்தி 2—ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2202 — பொதுக் கல்வி – 02 – இடைநிலைக் கல்வி – 109 – அரசு இடைநிலைப் பள்ளிகள் – I – திட்டத்தில் சேராதது – AA – அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம்”.
(த.தொ.கு 2202—02—109 AA 0000)

4. மேலே பத்தி 2—ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் செலவிற்கான கூடுதல் நிதி 2011—2012—ஆம் ஆண்டிற்கான இறுதித் திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு நிதியொதுக்கம் செய்வதை எதிர்நோக்கி பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இக்கூடுதல் செலவினத்தை சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு 2011—2012—ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் (Supplementary Estimates) ஒரு

குறிப்பிட்ட தொகை சேர்க்கப்படும். 2011–2012–ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்திய நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித் துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறும், மேலும் இச்செலவினத்தை துணை மதிப்பீட்டில் சேர்த்திடும் பொருட்டு தேவையான விளக்கக் குறிப்பினை நிதித்துறைக்கு அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.12220/CMPC/2012, நாள் 01.03.2012–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1735 (ஆயிரத்து எழுநூற்று முப்பத்தைந்து).

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை (கிழக்கு)/சென்னை(வடக்கு)/சென்னை (தெற்கு).
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
நகல்
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, சென்னை–9.
நிதித் (கல்வி II/வரவு செலவு (பொது–I&II)(CMPC) துறை, சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
பள்ளிக் கல்வி (பட்ஜெட்) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்.